உ



மீசாலை மேற்கு மீசாலையைச் சேர்ந்த
அமரர் சின்னப்பு தாமோதரம்பிள்ளை
அவர்களின்
சிவபதப்பேறு குறித்த
நினைவு மலர்
11.09.2002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும் —

திருவள்ளுவர்

அமரர்

# திரு. சின்னப்பு தாமோதரம்பிள்ளை

அவர்கள்

(கடை உரிமையாளர் - மீசாலை)

வையத்துள்

1931

01

11



வானத்துள்

2002

08

13

## திதி நிர்ணய வெண்பா

ஆண்டு சித்திர பானுதனி லாடி பூர்வம்
பூண்ட பஞ்சமி சீர்திதியில் — மாண்புமிகு
ஈசன்தாள் சேர்ந்தார்நற் தாமோ தரம்பிள்ளை
காசினியில் வாழ்வுவிட்டே தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சமர்ப்பணம்

காலமெலாம் எமக்காகப் பாடு பட்டீர்
கடமைதனைத் தவறாது நிறைவு செய்தீர்
சீலமுறும் எம்வாழ்வைக் கண்டு கொண்டீர்
சீக்கிரமாய் எமைவிட்டுப் பிரிந்து விட்டீர்

ஆலமுண்ட அரனடியிற் சேர்ந்து கொண்டீர்
அவனருள்பெற் றின்புறவே வேண்ட லோடு
கோலமதை எண்ணி எண்ணிக் கண்ணீ ரோடு
காணிக்கையா யிம்மலரைச் சூட்டு கின்றோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருச்சிற்றம்பலம்

பூழியர் கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல் போற்றி
ஆழிமிசைக் கல் மிதப்பிலணைந்த பிரானடி போற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம் போற்றி
ஊழிமலி திருவாத வூரர் திருத்தாள் போற்றி

## திருஞானசம்பந்தர் தேவாரம்

**பண்- நட்டபாடை** **இராகம்:- கெம்பீரநாட்டை**

தோடுடைய செவியன் விடையேறி ஓர் தூவெண்மதி சூடிக்
காடுடைய சுடலைப் பொடி பூசியென்னுள்ளங் கவர்கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட் பணிந்தேத்த அருள்செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மான் இவனன்றே

**பண்:- நட்டராகம்.** **இராகம்:- பந்துவராளி**

என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமேயிருங்கடல் வையத்து
முன்னம் நீபுரி நல்வினைப் பயனிடை முழுமணித் தரளங்கள்
மன்னுகாவிரி சூழ்திருவலஞ்சுழி வாணனை வாயாரப்
பன்னியாதரித் தேத்தியும் பாடியும் வழிபடும் அதனாலே

## திருநாவுக்கரசு சுவாமிகள் திருத்தாண்டகம்

காலனைக் காலாற் காய்ந்த கடவுள் தன்னைக்
காரோணங் கழிப்பாலை மேயான் தன்னைப்
பாலனுக்குப் பாற்கடலன்றீந்தான் தன்னைப்
பணியுகந்த அடியார்கட்கினியான் தன்னைச்
சேலுகளும் வயலாரூர் மூலட்டானஞ்
சேர்ந்திருந்த பெருமானைப் பவள மீன்ற
ஆலவனை அரநெறியிலப்பன் தன்னை
அடைந்தடியேன் அருவினைநோய் அறுத்தவாறே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த் துன்விரை
யார்க்கழற்கென
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி
வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றிசயசய
போற்றியென்றும்
கைதான் நெகிழவிடேன் உடையாய் என்னைக்
கண்டுகொள்ளே.

**தில்லையில் அருளிச்செய்த**

# திருப்பொற்சுண்ணம்

ஆனந்த மனோலயம்
(மனம் ஆனந்தத்திலேலயப்படுந் தன்மை)

முத்துநற்றாமம் பூமாலை தூக்கி
முளைக்குடம் தூபம் நற்றீபம் வைமின்
சக்தியும் சோமியும் பார்மகளு
நாமகளோடு பல்லாண் டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்பதியுங்
கங்கையும் வந்து கவரி கொள்மின்
அத்தன் ஐயாறன் அம்மானைப் பாடி
ஆடப் பொற்சுண்ண மிடித்து நாமே.

பூவியல் வார்சடை யெம்பிரார்க்கு
பொற்றிருச் சுண்ண மிடிக்க வேண்டும்
மாவின் வடுகின்ன ரண்ண கண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூடுமின் தொண்டர் புறம்நிலாமே
குனிமின் றொழுமி னெங்கோ னெங்கூத்தன்
தேவியுந் தானும் வந்தெம்மை யாளச்
செம்பொன்செய் சுண்ண மிடித்து நாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தர நீறணிந்தும் மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டி யெங்கு
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோனயன் றன்பெருமான்
ஆழியான் நாதன் நல்வேலன் தாதை
எந்தரம் ஆளுமையாள் கொழுநற்
கேய்ந்த பொற்சுண்ண மிடித்து நாமே.

காசணி மின்க ளுலக்கை யெல்லாம்
காம்பணி மின்கள் கறையுரலை
நேசமுடன் அடிய வர்கள்
நின்று நிலாவுக என்று வாழ்த்தி
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங்கச்சித்
திருவேகம்பன் செம்பொற் கோவில் பாடி
பாச வினையைப் பறித்து நின்று
பாடிப்பொற் சுண்ண மிடித்து நாமே.

அறுகெடுப் பாரய னும்மரியும்
அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர் கணங்க ளெல்லாம்
நம்மிற் பின்பல்ல தெடுக்க வொட்டோம்
சிறிவுடை மும்மதில் எய்த வில்லி
திருவே கம்பன் செம்பொற் கோயில்பாடி
பாச வினையைப் பறித்து நின்று
பாடிப்பொற் சுண்ண மிடித்து நாமே.

உலக்கை பலவோச்சு வார்பெரியர்
உலகமெ லாம் உரல்போ தாதென்றே
கலக்க அடியவர் வந்து நின்றார்
காண உலகங்கள் போதா தென்றே
நலக்க அடியோமை ஆண்டு கொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத் தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்து பொற் சுண்ண மிடித்து நாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழகந் தோளவளை ஆர்ப்ப வார்ப்பத்

தொண்டர் குழாமெழுந் தார்ப்ப வார்ப்ப

நாடவர் நந்தம்மை ஆர்ப்ப வார்ப்ப

நாமுமவர் தம்மை ஆர்ப்ப வார்ப்ப

பாடக மெல்லடி யார்க்கும் மங்கை

பங்கின னெங்கள் பராபரனுக்

காடக மாமலை யன்ன கோவுக்

காடப் பொற் சுண்ண மிடித்து நாமே.

வாள்தடங் கண்மட மங்கை நல்லீர்

வரிகளை ஆர்ப்ப வண் கொங்கை பொங்க

தோள்திரு முண்டகந் துதைந் திலங்க

சோத்தெம் பிரானென்று சொல்லிச் சொல்லி

நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங் காட்டி

நாயிற் கடைப்பட்ட நம்மை யிம்மை

ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப் பாடி

ஆடப்பொற் சுண்ண மிடித்து நாமே.

வையக மெல்லாம் உரலதாக

மாமேரு என்னும் உலக்கை நாட்டி

மெய்யெனும் மஞ்சள் நிறைய அட்டி

மேதகு தென்னன் பெருந்துறையான்

செய்ய திருவடி பாடிப் பாடி

செம்பொன் உலக்கை வலக்கை பற்றி

ஐயன் அணிதில்லை வாணனுக்கே

ஆடப்பொற் சுண்ணம் இடித்து நாமே.

முத்தணி கொங்கை ஆட ஆட

மொய்கழல் வண்டினம் ஆட ஆட

சித்தம் சிவனொடும் ஆட ஆட

செங்கயற் கண்பனி ஆட ஆட

பித்தெம் பிரானொடும் ஆட ஆட

பிறவி பிறரொடும் ஆட ஆட

அத்தன் கருணை யோ டாட ஆட

ஆடப்பொற் சுண்ணம் மிடித்து நாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாடு நகைவாள் நிலாவெறிப்ப
வாய்திறந் தம்பவளந் துடிப்ப
பாடுமின் நந்தம்மை ஆண்ட வாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமின் எம்பெரு மானைத் தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத் தேறி
ஆடுமின் அம்பலத் தாடி னானுக்
காடப் பொற் சுண்ண மிடித்து நாமே.

மையமர் கண்டனை வான நாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன் தன்னை
ஐயனை ஐயர் பிரானை நம்மை
அகப்படுத் தாட்கொண் டருமை காட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர் மெய்யைப்
போதரிக் கண்ணினை பொற்கொடித் தோட்
பையர வல்குல் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ண மிடித்து நாமே.

மின்னிடைச் செந்துவர் வாய்க் கருங்கண்
வெண்நகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடைய யாரமு தெங்க ளப்பன்
எம்பெரு மானிம வான் மகட்கு
தன்னுடைக் கேள்வன் மகன் தகப்பன்
தமைய னெம்எம் மையன் தாள்கள் பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கை நல்லீர்
பொற்றிருச் சுண்ண மிடித்து நாமே.

சங்க மரற்றச் சிலம் பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலை யாடச்
செங்கனி வாயித ழுந்துடிப்பச்
சேயிழையீர் சிவலோகம் பாடி
கங்கை இரைப்ப அராவிரைக்கும்
கற்றைச் சடைமுடி யான் கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கை பொங்கப்
பொற்றிருச் சுண்ண மிடித்து நாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானக் கரும்பின் தெளிவைப் பாகை
நாடற் கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானை
சித்தம் புகுந்து தித்திக்க வல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டு கொண்ட
கூத்தனை நாத்தழும் பேற வாழ்த்தி
பானற் தடங்கண் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ண மிடித்து நாமே.

ஆவகை நாம்வந் தன்பர் தம்மோ
டாட்செய்யும் வண்ணங்கள் பாடி விண்மேல்
தேவர்க னாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ் செல்வச்
சேவகம் ஏந்திய வெல் கொடியான்
சிவபெருமான் புரம் செற்ற கொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப் பாடிச்
செம்பொன் செய்சுண்ண மிடித்து நாமே.

தேனக மாமராக் கொன்றை பாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப்பிள்ளை பாடி
மால்விடை பாடி வலக்கை யேந்து
மூனக மான்மழுச் சூலம் பாடி
உம்பரும் இம்பரும் உய்ய அன்று
போனக மாக நஞ்சுண்டல் பாடி
பொற்றிருச் சுண்ண மிடித்து நாமே.

அயன்தலை கொண்டு செண் டாடல்பாடி
அருக்கன் எயிறு பறித்தல் பாடிக்
கயன்தனைக் கொன்றுரி போர்த்தல் பாடி
காலனைக் காலால் உதைத்தல் பாடி
இயைந்தன முப்புரம் எய்தல் பாடி
ஏழை அடியோமை ஆண்டு கொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடி யாடி
நாதற்குச் சுண்ண மிடித்து நாமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்ட மலர்க் கொன்றை மாலை பாடி
மத்தமும் பாடி மதியும் பாடிச்
சிட்டர்கள் வாழுந் தென்தில்லை பாடி
சிற்றம்பலத் தெங்கள் செல்வம் பாடி
கட்டிய மாகணக் கச்சை பாடி
கங்கணம் பாடிக் கவித்த கைம்மேல்
இட்டுநின் றாடு மாரவம் பாடி
ஈசற்குச் சுண்ண மிடித்து நாமே.

வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்மையும் பொய்மையும் ஆயினார்க்கு
சோதியு மாயிரு ளாயி னார்க்கு
துன்பமு மாயின்ப மாயி னார்க்கு
பாதியு மாய முற்று மாயினார்க்கு
பந்தமு மாய் வீடுமாயி னார்க்குக்
ஆதியு மந்தமு மாயி னாருக்
காடப் பொற் சுண்ண மிடித்து நாமே.

****

## திருவிசைப்பா

மூலமாய் முடிவாய் முடிவிலா முதலாய்
முகத்தலை அகத்தமர்ந் தினிய
பாலுமாய் அமுதாம் பன்னகா பரணன்
பனிமலர்த் திருவடி இணைமேல்
ஆலையம் பாகின் அனைசொற் கருவூர்
அமுதுறழ் தீந்தமிழ் மாலை
சீலமாப் பாடும் அடியவர் எல்லாம்
சிவபதம் குறுகிநின் றாரே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்க நம்
பக்தர்கள் வஞ்சகர் போய் அகல
பொன்னின்செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப்பிறவி யறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்புவேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் - உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான்மகிழ்ந்துபாடி
அறவாநீ ஆடும்போது உன்அடியின்கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

எழுகடல் மணலை அளவிடில் அதிகம்
எனதிடர்பிறவி அவதாரம்
இனியுனதபயம் எனதுயிர் உடலும்
இனியுடல்விடுக முடியாது

கழுகொடுநரியும் எரிபுவி மறவி
கமலனும் மிகவும் அயர்வானார்
கடனுனதபயம் அடிமை உன்னடிமை
கடுகி உன்னடிகள் தருவாயே

விழுதிகழ்அழகி மரகதவடிவி
விமலிமுன்னருளும் முருகோனே
விரிதல மெரியக் குலகிரி நெரிய
விசைபெறும் மயிலில் வருவோனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுகடல் குமுற அவுணர்கள் உயிரை
இரைகொளும் அயிலை உடையோனே
இமையவர் முனிவர் பரவிய புலியூ
ரினில் நடமருவு பெருமானே.

## திருப்புகழ்

காலனிடத்தணுகாதே காசினியிற் பிறவாதே
சீல அகத்தியஞானத் தேனமுதைத் தருவாயே
மாலயனுக்கரியானே மாதவரைப் பிரியானே
சோலை மலைக்குரியானே சுவாமிமலைப் பெருமானே.

## கந்தரனுபூதி

கார்மாமிசை காலன்வரிற் கலபத்
தேர்மாமிசைவந் தெதிரப்படுவாய்
தார்மார்பவலாரி தலாரியெனும்
சூர்மாமடியத் தொடுவேலவனே

சாகாதெனையே சரணங்களிலே
காகாநமனார் கலகம்செயுநாள்
வாகாமுருகா மயில்வாகனனே
யோகா சிவஞானொப தேசிகனே

எந்தாயு மெனக் கருள் தந்தையும் நீ
சிந்தா குலமானவை தீர்த்தெனையாள்
கந்தாகதிர் வேலவனே உமையாள்
மைந்தா குமராமறை நாயகனே

## அபிராமி அந்தாதி

வல்விய பாகத்திறைவரும் நீயும் மகிழ்ந்திருக்கும்
செவ்வியு முங்கள் திருமணக்கோலமும் சிந்தையுள்ளே
பவ்வியம் தீர்த்தென்னை யாண்டபொற்பதமாகிவந்து
வெவ்விய காலன் என்மேல் வரும்போது வெளிநிற்கவே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்புற்று வாழ்க

## இறைவணக்கம்

எல்லாம் வல்ல தெய்வது எங்கும் உள்ளது. நீக்கமற
சொல்லால் மட்டும் நம்பாதே சுயமாய்ச் சிந்தித்தே தெளிவாய்
வல்லாய் உடலில் இயக்கமவன் வாழ்வில் உயிரில் அறிவுமவன்,
கல்லார் கற்றார் செயல்விளைவாய்க் காணும் இன்ப துன்பமவன்.

அவனின் இயக்கம் அணுவாற்றல் அணுவின் கூட்டுப் பக்குவம் நீ
அவனில் தான்நீ உன்னில்அவன் அவன்யார் நீயார் பிரிவேது
அவனை மறந்தால் நீ சிறியோன் அவனை அறிந்தால் நீ பெரியோன்
அவன் நீ ஒன்றாய் அறிந்த இடம் அறிவு முழுமை அது முக்தி.

## குரு வணக்கம்

அண்டமதில் உருவெடுத்து அறிவைப் பெற்று
அவ்வறி ஒன்றுமுதல் ஆறதாகிக்
கொண்ட மேலாம் இவ்வுருவில் குறிப்பில் லாமல்
கோடானுகோடி எண்ணி அனுபவித்துக்
கண்டபலன் எனையறிய நினைந்தேனப்போ
கருந்துணர்த்திக் கனல் மூட்டிக் கருவாம் ஞானக்
குண்டலினி எனும் என்மெய்யுணர்வு எழுப்பிக்
குறித்து எனையறிவித்த குருவே அன்பே.

சுமார் நாற்பது ஆண்டுகட்கு முன்பதாக என்நினைவுகளை மீட்டிப் பார்க்கின்றேன். என்றும் கலகலப்பாக இருக்கும் உங்கள் சார்வீடுதான் முதலில் என் ஞாபகத்துக்கு வருகிறது. கேணியடிச்சந்தியிலிருந்து பங்களா ரோட்டிற்குப் போவோர் வருவோர் எல்லோரும் குறுக்குப் பாதைக்காக உங்கள் வளவு ஊடாகவே செல்வார்கள். அவர்களின் செய்திப் பரிவர்த்தனை நிலையம் உங்கள் வீட்டின் முன்புறம் அமைந்த சார்வீடாகவே இருக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோட்ட வேலைகள் வெளி வேலைகள் முடிந்துவிட்டது என்றால் சார்வீட்டில் உங்களைக் காணலாம். நீங்கள் களை ஆறுவது படுப்பது எல்லாம் அதிலேயே தான். சார் வீட்டில் தெற்குப் பக்கம் வைக்கப்பட்ட மேசையருகில் இருக்கும் கதிரையில் இருந்துதான் சந்தையால் வந்தவுடன் தினகரன் பத்திரிகை வாசிப்பீர்கள். சுமார் எட்டு ஒன்பது வயதான நான் எட்டி எட்டிடி நீங்கள் படிக்கும் பத்திரிகையைப் படிப்பேன். அதற்கான விளக்கங்களை உடனுக்குடன் கேட்டுக் கொள்வேன். அதிகம் கதைக்காமல் என்கேள்விகட்கெல்லாம் பொறுமையாகச் சிரித்தபடி பதில் சொல்வீர்கள்..

வெயில் குறைந்ததும் வயல் வேலை தோட்ட வேலை என்று வெளியே போவீர்கள், மீசாலை, வயலில் நல்ல மிளகாய்க் கன்று, தோட்டத்தில் கத்தரி, மிளகாய், பூசினி, வள்ளி, இவற்றுடன் சிகரட் புகையிலைப் பயிர்களாம். மாலையானதும் வண்டி நிறைய மூட்டைகளாய் அவை வந்து இறங்கும். ஒரு கொட்டில் நிறைய பூசினிக்காய் கிழங்குவகை அடுக்கப்பட்டிருக்கும்.

ஐரோப்பியர் நாட்டினர் வந்து சிகரட் புகையிலை ஏற்றுமதி செய்தபோது நீங்கள் பொருளாளராம், அந்த நேரங்களில் வேலைகள் ஆரம்பித்தால் இரவு பகலாக கணக்கு வழங்கு எழுதுவதும் ஆட்கள் வருவது போவதும் மிகுந்து காணப்படும்.

தோட்டம், வயல், சமுதாயக்கடன் என்று ஒரே பிஸியாக இருந்தாலும் எதையும் அலட்டிக் கொள்ளாதமாதிரியான நடைபாவனைகளை எப்போதுமே காணக்கூடியதாக இருக்கும். வானொலியில் இசை நிகழ்ச்சிகள் எல்லாம் இரசிப்பீர்களே! இதனால் தான் என்னவோ என் மூத்த தமையனாரை மைத்துனராக்க அரும்பாடு பட்டவர் தாங்கள் என பெரியவர் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன். இன்னும் இசையின் மேலிருந்த ஈடுபாட்டின் காரணமாக அவரிடமே இசை பயின்று வந்தீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம் கடக்கிறது, சுழல்கிறது, நீங்கள் இப்போது கடைமுதலாளியாகி விட்டீர்கள். பிரபல பலசரக்கு மாளிகை. அதிலும் "தாமோதரம் பிள்ளையின் புகையிலை" என்றால்........ இப்படி உங்கள் கடைவாயிலில் மாலை நேரம் தவறாது சனம் மொய்க்கும்.

கோப்பாய் இருபாலையூரில் துணைவியைப் பெற்று குழந்தைகள் நால்வர் கண்டு மகிழ்ந்தீர்கள். டாக்டர்கள் ஆக்கியும் பல்கலை பயில்வித்தும் நிறைவு கொண்டீர்கள். மகள் சுதாவுக்கு திருமணம் செய்து மகிழ்ந்தீர்கள். இடப்பெயர்வு வந்ததனால் நொந்தீர்கள்.

பொருட்கள் சூறையாடப்பட்டபோதும், கூரையை இழந்தபோதும் வீடே அமர்ந்தபோதும் இன்னும் உயிர்களை இழந்தபோதும் துன்பப்படாத தென்மராட்சி மக்களே இல்லைத்தான். ஆயினும் நாம் கொண்டு வந்த வினையைத் தானே நாம் அனுபவிக்கின்றோம். இதனை மறந்து கண்ணில் காணுவது எல்லாம் நிஜம் எனவும் நினைக்கின்றோம். இவை எல்லாம் எமது சொந்தம் எமக்கு நிந்தம் என்ற பொய்யுணர்வில் மயங்கி நிற்கிறோம். இன்பமும் துன்பமும் எட்டிப்பார்த்துப் பூச்சாண்டி காட்டுவதே எம் வாழ்வில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

மகள் ராதாவுக்கு திருமணம் செய்யவென்று கொழும்பு செல்கிறீர்கள் அங்கு திருமணம் கண்டு மகிழ்ந்தபின் உடலில் வருத்தம் ஆரம்பிக்கின்றது. நிலையுணர்ந்து இளையமகள் லதாவின் திருமணத்தையும் நடத்தி முடிக்கிறீர்கள். மகள் சீதாவின் திருமணத்தையும் நிச்சயித்துக் கொண்டிருக்கிறீர்கள்.

நான் வைகாசி மாத முதற்பகுதியில் தங்களைக் காண வருகின்றேன். எல்லாவற்றுக்கும் மேலான சக்தி ஒன்று எம்மை ஆட்டுகின்றது. என்பதை நான் கூறிநிற்கின்றேன். பல ஆன்மீக நூல்களையெல்லாம் வாசித்தறிந்த நீங்கள் இதனை ஆமோதித்து அதுவே உண்மை என்றும் ஏற்று பல பேசினீர்கள். மேலும் மகள் சீதாவின் திருமணம் முடிந்துவிட வேண்டும். என்ற செயற்பாட்டிலும் சிந்தனையிலும் இருக்கிறீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் பயணம் முடித்து மீண்டும் ஆடி மாத முற்பகுதியில் உங்களைச் சந்திக்கிறேன். தற்செயலாக உங்கள் வீட்டிலிருந்த அந்தச்சிலை என் கண்ணில்படுகிறது. பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

''இதை நான் பராமரிக்க முடியாது, வேண்டாம் என்று சொல்லாமல் இதனைக் கொண்டு போங்கள். இது உங்களுக்கே பொருத்தமானது,'' என்று கூறியது கடவுளே பேசியது போலிருந்தது ஆதலால் நான் மறுக்கவில்லை.

பிள்ளைகள் யாவருடைய திருமணமும் முடித்து அனுப்பிவிட்டுச் சொந்த இடம் வருகிறீர்கள். என் கடமை முடிந்துவிட்டது. என்று எண்ணிவிட்டமையாற் போலும் வருத்தம் கூடிவிட்டது. ஆம் நமக்கு நமது வாழ்வுக்கு, நாமே காரணம் நம் மனமே காரணம்..

" வருத்தம் பார்க்கவென்று நான் வருகின்றேன், நீங்களோ ஐயோ ஐயோ என்று சொல்லிக்கொண்டு படுக்கையிலிருக்கிறீர்கள். எனக்கோ மிக வேதனையாக இருக்கிறது.

எத்தனையோ மகான்களும், சமயகுரவர்களும் எமது சமயம் பற்றிய உண்மையைச் சொல்லிப் போயிருக்கிறார்கள். ஆனால் நாமோ அது அந்த யுகம், இது கலியுகம், அது அந்தக்காலப் புராணம் என்றுகூறி எம்மை நாமே ஏமாற்றிக் கொண்டிருக்கிறோம். எதனையும் சரியாகக் கடைப்பிடியாமலும் உணர்ந்து கொள்ளாமலும் வீணே காலத்தை அவமாக்கி வருந்திக் கொண்டிருக்கிறோம்.

"ஐயோ என்று சொல்வதுகூடாது ஆண்டவனின் நாமத்தைச் சொல்லக்கூடாதா" என்கிறேன். "ஐயோ கிளி அது ஒன்றுதானே என்கு முழிசாய்த் தெரியும்" என்கிறீர்கள். மேலும் சொல்லவா விடவா என நினைக்கிறேன். ஆனால் இனி எப்போது சொல்லச் சந்தர்ப்பம் வரும்.
நீங்கள் "ஓம் நமசிவாய" என உச்சரியுங்கள். இதுவே அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நால்வரும் கூறிய வழிகாட்டிய வழி. தேவாரம் பாடிய மூவரும் (காதலாகி-சொற்றுணைவேதியன் - மற்றுப்பற்றென) தம் பதிகங்களின் இறுதியில் நமச்சிவாயவே என்றுபாடி எத்தனையோ அற்புதங்களை மக்களுக்காகச் செய்துள்ளனர். மணிவாசகரோ நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க என முதலிலேயே பஞ்சாட்சரத்தைக் குறிப்பிட்டுப் பாடியுள்ளார். எனவே இதுவே பாவம் அறுக்கும். பயம் ஒழிக்கும். பரகதி சேர்க்கும் இதுவே மந்திரமும் ஆகும் என்கிறேன் நான். இதனை ஏற்றாற்போல் நீங்கள் மறுவிடை கூறவில்லை. மௌனமாகப் படுத்திருந்தீர்கள்.

எங்கள் இந்து சமயமோ எவ்வளவோ மேன்மை உடையது. எல்லாச் சமயங்களிலும் உள்ள மேன்மைகளைத் தன்னகத்தே கொண்டது. பரந்தது. விரிந்தது. சிறந்தது. ஆயினும் இன்று இதனை வழிகாட்டுவோர் செய்யும் தவறுகளினால் எமது சமயத்தின் உண்மைகளை, தத்துவங்களை, பயன்களை, மகிமைகளை மக்கள் அறிய முடியாமல், அனுபவிக்க முடியாமல் போய்விடுகிறதே.

இந்து சமயத்தின் பெயரால் வியாபாரங்களும், பேய் பித்தல் ஆட்டங்களும், பலிக் கொடுமைகளும் பெருகி வருகின்றன. உயிருடன் இருக்கும் போது உச்சரிப்பதற்குச் சொல்லிக்கொடாத மந்திரங்கள் உணர்வடங்கிக் கிடக்கும் போது காதினுள்ளே ஓதப்படுகின்றன. எமது சமுதாயத்தில் உள்ள கொடுமைகள், மடமைகள், யாவும் களையப்பட வேண்டும். போலியும் வேஷமும் அற்ற மெய்ஞானம் பற்றி மக்கள் அறியவேண்டும். ஆத்மீக உணர்வு, ஞானம் ஏற்படுமிடத்து மனிதருள்ளே பேதமோ சண்டையோ, சச்சரவோ எழாது. என்றும் சாந்தியும் சமாதனமும் தானாகவே மலரும்.

எனது குருசுவாமி, ஸ்ரீராஜ்குமார், அவர்கள் "உங்கள் அன்னையை, தந்தையை, கணவரை, பிள்ளைகளை, சகோதரரை, நண்பர்களை, எதிரிகளாய் இருப்பவர்களும் நல்லவராக வேண்டும் என்பதையும் கேட்டு அவர்களனைவரையும் வாழ்த்துங்கள். என்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லுவார். நோயுற்று வருந்துபவர்க்காக அல்லது இடர்ப்படுபவருக்காக நாம் பிரார்த்திக்க வேண்டும். இவற்றில் எல்லாம் பங்கு கொண்டு சேவை செய்யுங்கள் என்பார். என் மனத்தை அரித்துக் கொண்டிருக்கும் பிரார்த்தனை எண்ணத்தில் நான் முழுகி விடுகிறேன்.

அவ்வகையில் ஞாயிற்றுக்கிழமை எழுந்ததிலிருந்து நோயுற்ற தங்கட்காகப் பிரார்த்தனை பண்ணுவது எங்கள் குருநாதரிடமும் உங்கள் வீட்டாரிடமும் இதுபற்றிக் கலந்து ஆலோசிப்பது, அவ்வமயம் எந்த எந்தப் பதிகங்களைப் பாடுவது எப்படி எப்படி வாசகங்களைக் கூறிவேண்டுதல் செய்வது. இதில் யார் யார் என்னுடன் கூட வருவார்கள் என்றெல்லாம் அந்நிகழ்வு நடப்பதான நினைவுகளை அசைபோட்டுப் பார்த்தே இரவு கழிந்தது.

எமது குருநாதர் வந்தவுடன் இதுபற்றிப் பேசவேண்டும் என்று மனம் பேசுகிறது. எங்கு போனாலும் எது செய்தாலும் அந்நினைவு என்னைத் துரத்திக் கொண்டேயிருந்தது. விரைவில் இது முடித்தே தீருவேன் என் மானசீகமான பிரார்த்தனையில் மறு இரவும் கடக்கிறது.

விடிந்தபோது உங்கள் ஆத்மா சாந்தியடைந்துவிட்டது என்பதைக் கேள்விப்படுகிறேன். மனம், வாக்கு, காயம் எனும் மூன்றினாலும் செய்யப்படுகின்ற காரியங்களைத் தான் இறைவனும் விரும்புகின்றான். பூசலார் நாயனாரின் கதையை அறிந்தோர்க்கு. உண்மையை தத்துவத்தை தேடுகின்ற உள்ளங்கட்கு இது புரிந்துவிடும்.

பூவுலகில் எந்த எந்தக் காரியத்தை முடிக்கவேண்டும் என்று உங்கட்கு எழுதப்பட்டதோ அந்தந்தக் காரியங்களை நீங்கள் முடித்திருக்கிறீர்கள். உங்கள் கடமைகள் முடிந்தன, முடிக்கப்பட்டன. என்ற மனச் சாந்தியுடன் என்றென்றும் இறையடியில் இன்புற்று வாழ்க'.

**திருமதி. தெ. கிருஷ்ணசாமி,**
**செயலாளர்,**
**மீசாலை ஸ்ரீ காயத்ரி காமகோடி பீடம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் சின்னண்ணாவே !

நீங்கள் என் செல்ல அண்ணா நீங்கள் அண்ணா அன்றி அப்பாவும் ஆவீர்கள். எனக்கு மூன்று வயது மூத்த நீங்கள் ஒருநாளும் எடி பிடி என்று கூப்பிட்டிருக்க மாட்டீர்கள் . இவ்வளவு வயது வந்த பின்னும் என்னை அன்பொழுக பிள்ளை யென்றே கூப்பிடுவீகள். அச்சத்தத்தை எங்கே கேட்போம். என் தாயாரின் நினைவுக்காக உன்னைக் கொண்டு வந்து முன்னாலே இருத்தியிருக் கிறேன் எனப் பெருமை ததும்பக் கூறினாயே நான் இப்போ உன்நினைவுக்காக யாது செய்வேன். பிள்ளை பிள்ளை என அன்பைச் சொரிந்தாய் சின்னண்ணா உங்கள் அன்புச் செயல்களையும் சொல்களையும் நினைக்கும் தோறும் நெஞ்சம் குமிறிக் கண்கள் குளமாகின்றன.

எம் தந்தையை இழந்தகாலம் தொட்டே எம் அன்னையோடு தோள் கொடுத்து குடும்பப் பாரத்தைச் சுமந்தீர்கள். அப்போ சின்ன வயதானாலும் பசுமரத்தாணி போல் பட்ட கஸ்டங்கள் நினைவில் நிற்கின்றன.

அண்ணா ஒரு கொடியில் காய்த்த காய்கள் எல்லாரும் ஒருவர் பின் ஒருவராகச் சென்று விட்டீர்கள் நெஞ்சம் குமுறுகிறது எத்தனை அறிவுக்கதைகளை கூறிநீர்கள் தங்கைகள் மூவரின் நன்மை களையும் தாயாரின் துணையுடன் நீங்களே செய்து அவரவர்களின் சுக துக்கங்களில் பங்கு கொண்டீர்கள். சின்னண்ணா சகோதரிகளின் கடைமைகள் ஓரளவு முடியுதென்றதும் மக்களின் கடமை படிப்பு விவாகம் என்னும் கடைமைகளை அன்பு மனைவியியுடன் மிகுதி யின்றி நிறைவேற்றினீர்கள்.

அண்ணா கடைமைகள் முடிந்து ஒரு மாதம் கூட அப்பாடா என்று நின்மதியாக இருக்க இறைவன் விடவில்லை. கடைமையைச் செய்யப் பிறந்தீர்கள் கடைமைகள் முடிந்ததும் அதி சீக்கிரமெ சென்றுவிட்டீர்கள். உங்கள் புண்ணியத்தால் உங்கள் புத்திரிகளும் அவர்களுக்குக் கிடைத்த மணாளர்களும் சீரும் சிறப்புமாக வாள்வார்கள் என்பது நிச்சயம் சின்னண்ணா உங்கள் ஆத்மா இறைவனின் நிழலில் சாந்தி பெற என் கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்கு கின்றேன்.

**என் உயிர் உள்ளவரை,**
**உன் நினைவிலிருக்கும்**
**அன்புத் தங்கை**
**திருமதி. தங்கம்மா ஏரம்பமூர்த்தி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமதருமைச் சின்னண்ணாவே

எம் மூச்சிருக்கும் வரை உம் நினைவிருக்கும். இளம் வயதில் தந்தையை இழந்ததால், உங்கள் கல்வியை எம்மை வளர்ப்பதற்காகத் தியாகம் செய்தீர்கள். பொருளீட்ட என அன்னை வியாபாரம் செய்யப் புறப்பட்டதால் எமை அன்பாக அரவணைத்து, ஆதரவாய் இனிய மொழிபேசி, இன் முகம் காட்டி எமை வளர்த்த எமதருமைத் தெய்வமே நீங்கள் என்றும் எம் உள்ளத்தில் வாழ்வீர்கள் அண்ணா. எம் மூச்சிருக்கும் வரை 'பிள்ளை' என அழைக்கும் அந்த இனிய அன்புக் குரலை மறக்கவே முடியாது அண்ணா.

துள்ளித் திரிகின்ற பச்சிளம் பருவத்திலேயே உங்கள் பிஞ்சுக் கரங்களால் மண் வெட்டி கொண்டு விவசாயம் செய்து எம்மைக் காப்பாற்றினீர்கள். சொத்துக்கள் சுகங்கள் யாவும் ஈந்து சுகமாய் நாம் வாழவழியும் வகுத்தீர்கள் எனவே அன்னையும் பிதாவுமாகி அறிவூட்டும் நல் ஆசானாகி எம்மை மகிழ வைத்த எம் உதிரச் சகோதரனே! மந்தையை இழந்த கன்று மனம் நொந்து அழுவது போல் அண்ணாவே உம் நினைவு மனமதனை வாட்டுதண்ணா.

அண்ணா! நீங்கள் இவ்வுலகில் கடைமை செய்ய என்றுதான் பிறந்தீர்களா? இளம் பிராயந் தொட்டு தாய் சகோதரர்க்குக் கடைமை செய்தீர்கள். திருமணப் பருவம் எய்தவே மனமொத்த மனையாளை மணந்து இல்லற வாழ்வை நல்லறமாக நடாத்தி கண்ணிறைந்த நான்கு புதல்வியரைப் பெற்று மகிழ்ந்தீர்கள். புத்திரிகள் நால்வரும் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்ந்து பல்லோரும் போற்றும் வண்ணம் கலை கல்விஞானம் பெற்று உயர்கல்வியும் கற்று உத்தியோகமும் பார்த்து உத்தமிகளாக வாழ்ந்து வரும் நாளில் நீங்கள் செய்த தவமோ அன்றிப் பிள்ளைகள் செய்த தவமோ நால்வருக்கு மேற்ற வகையில் உத்தம சீலரான மருமக்கள் வாய்க்கப் பெற்று அவர்களின் திருமண விழாவையும் கண்டு களித்தீர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம் மட்டில் உங்கள் கடைமைகள் முடிந்து விட்டன இவ் உலகில் நீங்கள் அறிந்து ஒரு பாவமும் செய்திருக்க மாட்டீகள். சில வேளை சில வேளை அறியாத்தனமாக ஏதாவது தவறு இளைத்ததற்காகவோ என்னவோ பொல்லாத நோயைத் தந்து சொற்ப காலம் பெரும் அவஸ்தைப் படுத்தி விட்டான் ஆண்டவன். நோய் என்று அறிந்த நேரத்திலிருந்து இற்றை வரை இன்னமும் துயரிலிருந்து மீள முடியவில்லை அண்ணா. ஈருடல் ஒருயிர் போல் வாழ்ந்த உங்கள் உத்தமியின் துயர் துடைக்க அரு வுருவில் வந்து ஆறுதல் வார்த்தை கூறுவீகளா அண்ணா! உலகறிந்த ஞானியாக நீங்கள் இவ்வுலகில் வாழாவிட்டாலும் உத்தமனாய் வாழ்ந்துள்ளீர்கள். எனவே இறைவன் உங்களைத் தன் பாத கமலத்தில் வைத்திருப்பான் என்பதில் ஐயமில்லை.

நீங்கள் காட்டிய பாதையில் வாழ்ந்து எம் மூச்சிருக்கும் வரை உம் நினைவிருக்கும் என உறுதி கூறுவதோடு விம்முகின்ற இதயத்தையும் விழி வழி நீரோடும் நினைவுகளையும் சுமந்து சிரம் தாழ்த்தி கரம் கூப்பிக் கண்ணீர்ப் பூக்களையும் தங்கட்குக் காணிக்கை ஆக்குகின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

**இங்ஙனம்**

**அன்புத் தங்கை,**

**திருமதி. நல்லம்மா பொன்னம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தந்தையாகிய சகோதரன்

அண்ணா உங்களது செய்தி கேட்டு உள்ளம் குமுறுகிறது. அத்தோடு தூரத்து தண்ணீர் ஆபத்துக்கு உதவாது என்பார்கள் உண்மைதான் என் செய்வோம் அண்ணா. மகள் இராதாவும் நானும் ஒருவர் கொருவர் ஆறுதல் சொல்லியும் முடியவில்யே இச் செய்தியைக் கேள்வியுற்ற கனடா வாழ் சுற்றங்கள், நண்பர்கள், உங்களுடன் பழகியோர் என வந்து குவிந்துவிட்டார்கள். மற்றய நாடுகளிலிருந்தும் இங்கிருந்தும் தொலைபேசி மூலமும் பலரும் அனுதாபம் தெரிவித்துக் கொண்டேயிருக்கிறார்கள். மூன்று சகோதரர் என இருந்தோம் மூவரும் ஒருவர் பின் ஒருவராய் மூன்று சகோதரிகளையும் மனைவி மக்களையும் தவிக்கவைத்து சென்றுவிட்டீர்களே. சகோதர பாசம் பொல்லாதது அண்ணா இன்னும் கொஞ்ச காலத்துக்காவுதல் இருக்க வேண்டும் என்று எவ்வளவு செலவு செய்தேன் முடியவில்லையே கொடிய நோய் ஆட்கொண்டு விட்டதே இராதாவின் திருமணத்திற்கு கொழும்பு வந்த போது எவ்வளவு கதைகளைக் கதைத்தீர்கள் கடைசிச் சந்திப் பென்றா போய்வா பிள்ளை என கண்கலங்க அனுப்பியும் வைத்தீர்கள்.

சிறு வயதிலேயே தந்தையை இழந்தோம். இதனால் இருவரும் கல்வியை நிறுத்தி குடும்பப் பொறுப்பை ஏற்றீர்கள். படிக்க ஆசை இருந்தும், கெட்டித்தனம் இருந்தும், தந்தையுடன் கல்வி போம் என்ற பழமொழி எங்களுக்கே சரியாச்சு என்பீர்கள். அக் குறையை பிள்ளைகளாவது நிறைவேற்றி விட்டார்கள். தந்தை இறந்த போது எனக்கு இரண்டு வயது நிரம்பவில்லை, நல்ல குண்டு அடிக்கடி வருத்தம் வரும் தூக்க முடியாது தூக்கிக் கொண்டு வைத்தியர் வீடு செல்வது நன்கு ஞாபகம் இருக்கு இன்னும் குளிக்க, சாப்பாடு தீத்த எல்லாம் செய்வீர்கள் ஆதலால் என் அப்பாதான் என இருந்தேன். பின் ஐந்தாறு வயதாகும் போது தான் தெரிந்தது அப்பா சர்ப்பக் கடியால் காலமாகி விட்டார் என்று. கடைசிவரை தந்தை இல்லையே என்ற குறை இல்லாது பொறுப்புடன் செயற்பட்டீர்கள் அண்ணா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு முறை எனக்கு கடிதம் எழுதும் போது நன்கு கவலைப் பட்டு எழுதினீர்கள், பிள்ளைகளின் படிப்பு ஒருவாறு முடியப் போகிறது எல்லோருக்கும் திருமண வயதாகிவிட்டது, சீதனம் இங்கு ஒரு வரனுக்கு எத்தனையோ லட்சம் எனப் போகிறது நான் நால்வருக்கு என் செய்வேன் என எழுதியிருந்தீர்கள். வாசித்ததும் ஏதோ என் உள்ளத்தில் தோன்றியதை எழுதினேன். அண்ணா அவர்களின் திருமணத்தைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். அவர்களின் படிப்புத்தான் அவர்களின் சீதனம் ஆண்டவன் சித்தம் நான்கு உத்தமர்கள் வந்து கைப்பிடிப்பார்கள் எனப் பல கூடுதலாக பெண்பிள்ளை பெற்றவர்களை உதாரணம் காட்டி எழுதினேன். அவ்வாறே நால்வரின் திருமணத்தையும் சிறப்பாக செய்து கண்குளிரப் பார்த்து விட்டீகள். கடைசி ஊருக்கு போய் விட வேண்டும் எனத் துடித்தீர்கள் அதுவும் நிறை வேறியது. என் வேண்டுதலுக் கிணங்கி இயலாதிருந்தும் கஷ்டப்பட்டு உங்கள் குரலில் தேவார திருவாசங்கள் விரும்பிய பாடல்கள் பாடி ஓடியோ கசெற்றில் பதிந்து தந்தீர்கள்.

கடைசியாக ஊருக்குப் போவதற்கு முதல் நாள் நான் போனில் தொடர்பு கொண்ட போது

பிள்ளய் செல்லம் எல்லாம் நிறைவு, எல்லாம் நிறைவு, எல்லாம் சந்தோஷம் பிள்ளை நீ எழுதியது போல் எல்லாம் நிறைவேறியதடி எல்லோருக்கும் நன்றி இனி நான் இங்கு ஏன் இருக்க வேண்டும் சுதாவுடன் ஊருக்குப் போறேன் என்று ஆவேசத்துடன் உரத்த குரலில் கூறியது இன்னும் என் காதில் ஒலிக்கிறது. அதற்கிடையில் வந்த கடைமைகள் முடிந்ததென உலகையே விட்டுப் போய் விட்டீர்களே அண்ணா!

நேரம் கிடைக்கும் போதெல்லாம் புத்தகங்களையே படித்துக் கொண்டிருப்பீர்கள் அண்ணா. உங்களுக்குள் இருக்கும் அறிவையும் அறிய முயற்சி செய்யுங்கள் அதற்கு ஒரு ஆசானும் இப்போ வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்றோம் அக்காவும் நானும் அதை மாத்திரம் அலட்சியமாய் எடுத்து விட்டீர்கள். இனி என்ன செய்வோம் உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்திப் போம்.

**உங்கள்,**
**அன்புத் தங்கை,**
**செல்லம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளத்தின் உள்ளே

ஈழத்திரு நாட்டின் பசுமை நிறைந்த தென்மராட்சியில் தீந்தமிழ் அதனைத் திசையெல்லாம் பரப்பும் ஆன்றோர் அறிஞர் அனைவரும் கூடிச் சிறப்புற வாழும் மீசாலையம்பதியில் சின்னப்பு, வள்ளிப்பிள்ளை தம்பதியினருக்கு இரண்டாவது மகனாக 1931 ல் அமரர் தாமோதரம் பிள்ளை பிறந்தார்.

இவர் ஆரம்பக் கல்வியை மீசாலை அ. மி. த. கலவன் பாடசாலையில் ஆரம்பித்தார். ஆரம்பக்கல்வியின் பின் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் கல்வியைத் தொடரலானார். ஆனால் விதி இவருக்கு சதி செய்து விட்டது. இளமையில் தந்தையார் காலமானதால் கல்விக்கு முற்றுப்புள்ளி இடப்பட்டது. "தந்தையொடு கல்வி போம்" என்னும் கூற்றுக்கு இலக்கானார். குடும்பத்தின் பொருளாதார நிலை காரணமாக விவசாயத்தை மேற் கொண்டார். இதில் நல்ல முன்னேற்றம் ஏற்படவே அத்தோடு, "சிகறெற்" புகையிலைச் செய்கையிலும் முன்னோடியாக விளங்கினார். இதனை நல்ல முறையில் பதனிட்டுச் சந்தைப் படுத்துவதற்கு ஒரு சங்கம் அவசியமாக அமைக்கப்பட்டது. இவர் பொருளாளராகக் கடைமையாற்றினார். சங்கம் மிக லாபகரமாக ஓடியது லாபம் பங்குதாரர்களுக்கு பகிர்ந்து கொடுக்கப்பட்டது. நாட்டு நிலை காரணமாக புகையிலை வீழ்ச்சியுறவே இச் செய்கை நிறுத்தப்பட்டுது.

தாய் சகோதர்களின் நிலைமையை உத்தேசித்து வணிகராக மாறினார். மீசாலைச் சந்தியில் தனக்கென ஒரு கடையை ஆரம்பித்தார். மக்களுடன் அன்பாகவும், பண்பாகவும், ஆதரவாகவும் பழகியதால் வியாபாரத்திலும் முன்னேற்றம் கண்டார். நேர்மை காரணமாக, வணிகர் கழகத்திலும் பொருளாளர் ஆனார். இளைய சகோதரர்கள் நல்ல முறையில் வாழ வழி சமைத்தார். இவரும் மணப்பருவம் எய்தவே இருபாலையூர் வணிகர் திரு. அப்பையா மகள் யோகேஸ்வரி அவர்களை வாழ்கைத் துணையாகக் கரம் பற்றினார். இல்லறத்தை நல்லறமாக மாற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

, றாதா, சீதா, சுதா, லதா ஆகியோரைச் செல்வங்களாகப் பெற்றார். அவர்களுக்கு வேண்டிய கல்வி, ஞானம், செல்வம் எல்லாவற்றையும் சிறந்த முறையில் அளித்து நால்வரையும் உன்னத நிலையடையச் செய்தார். இவர்களுள் இருவர் வைத்தியத் துறையில் Doctors ஆக திகழ்ந்தார்கள். இறைவன் திருவருளால் மகளவைக்கு உத்தம குணமுடைய வர்களும், உயர் நிலையும் உடையவர்களாகிய நால்வரை மருமக்களாகத் தேர்ந்து திருமணங்களையும் சிறந்த முறையில் நிறைவேற்றி அகமகிழ்ந்தார். இவர் இத்தோடு நிற்கவில்லை. சமூக, சமயத் தொண்டுகளிலும் ஈடுபட்டார். இதன் காரணமாக மீசாலை, இலந்தைக் கூடல், கங்காணியார் முருகன் ஆலயத்தின் பரிபாலன சபையில் நீண்ட கால உறுப்பினராகி உப தலைவர் பதவியிலிருந்து ஆலய வளர்ச்சிக்காக அரும் பணியாற்றியவர். தேவார திருவாசகங்களை பண்ணுடன் பாடும் விருப்புடையவர். மரண வீடுகளில் தேவாரம் பாடுவதில் முன்னணியில் நிற்பார். இதுவன்றி ஆசனப் பயிற்சி பெற்று அதன் மூலம் தனது சில நோய்களையும் தீர்த்துக் கொண்டார். நேர்மை தவறாது தெய்வீக சிந்தனையுடன் நல்லதொரு குடும்பத் தலைவனாகவும் பொறுமையின் சின்னமாகவும் வாழ்ந்த தாமோதரம்பிள்ளை அவர்கள் சில காலம் நோய்வாய்ப் பட்டு படுக்கையில் இருந்த போதும் பாசமுள்ள மனைவியும், மக்கள், மருமக்களும் கண்ணும் கருத்துமாகப் பார்த்துக் கொண்டார்கள். இருந்தும் விதி யாரைத்தான் விட்டது?

எப்பவோ முடிந்த காரியம்!
ஒரு பொல்லாப்பும் இல்லை!
நாம் யாதும் அறியோம்
முழுவதும் உண்மை

என்ற யோகர் சுவாமிகள்

வாசகங்களே நம் அனைவருக்கும் ஆறுதல் அளிக்கும். இவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல கங்காணியார் முருகனின் பாதார விந்தங்களைப் பிரார்த்திக்கிறோம். இவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி நாமும் துயர் பகிர்கிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

சகோதரன்,
க.பெ. மார்க்கண்டு
(குடும்பத்தினர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்கள் மனம் கவர்ந்த வர்த்தகர்

திரு. சின்னப்பு தாமோதரம்பிள்ளை அவர்கள் மீசாலையில் 11.01.1931 ல் விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர். சிறந்த விவசாயியாக மிளிர்ந்தவர். வாணிபத்தில் அவருக்கு இருந்த நாட்டம் காரணமாக மீசாலையில் புகழ் பெற்ற வர்த்தகரானார். இவர் மக்களுடன் இனிமையாகப் புன் சிரிப்புடன் பேசி பெருமளவு வாடிக்கையாளர்களை கவர்ந்த வர்த்தகராக விளங்கினார்.

1995ம் ஆண்டில் மீசாலை கைத்தொழில் வணிக மன்றத்தின் பொருளாளராகத் தெரிவு செய்யப்பட்ட இவர் இம் மன்றத்தை தென்மராட்சியில் தரமான மன்றம் என்ற பெயருடன் மிளிரச் செய்தார்.

"வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தம்போல் செயின்"

என்னும் வள்ளுவன் தந்த திருக்குறளுக் கேற்ப வணிக ஒழுக்கத்தினைப் பேணி வாழ்ந்த உத்தமர் 13.08.2002 ல் இறைவனடி சேர்ந்துள்ளார்.

அன்னாரின் மறைவு வர்த்தக சமூகத்தினருக்கும், வாடிக்கையாளர்களுக்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

திருவாளர் சி. தாமோதரம்பிள்ளை அவர்களின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன் அவரின் பிரிவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கை ஆக்கு கின்றோம்.

- **கைத்தொழில் வணிக மன்றம்** -

மீசாலை
11.09.2002



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெஞ்சினில் நிறைந்துவிட்ட எம் இனியவர்களை எண்ணி

என் நினைவறிந்த பிராயம் முதல்
ஆசையப்பா என்று நான்
அன்பாக அழைத்து வந்த- என்
தாமோதரம் சித்தப்பா
மரணித்து விட்டாராம்
சிறு வயதில் மட்டுமல்ல என்றுமே
அவர் என்
அன்பான ஆசையப்பா!
என்றும் நான் அவர்க்கு
பாசமுள்ள செல்ல மகன்"

வாழ்வெனும் பயணத்தில்- எனக்கு
வழிகாட்டி போலிருந்த- என்
கிட்டுச் சித்தப்பா
அகாலத்தில் இறந்த செய்தி- என்
இதயத்தை கிழித்த ரணம்
சிறிதேனும் மாறுமுன்னே- என்
வாழ்வாக இருந்த என் தந்தை
எமைவிட்டுச் சென்றுவிட்டார்!!!
இறுதிக்கடன் முடிந்து இன்னும்
இருமாதம் ஆகவில்லை- இப்போ
இடிபோல இந்தச் செய்தி!

அப்பாவின் இறுதிக்கடன் முடித்து
நான் ஊரைவிட்டுத் திரும்புகையில்
ஆதரவாய் கட்டியணைத்தென்னை
கலங்காதே என்று சொன்னார்!
என் கண்ணை அவர்துடைத்து- தன்
கண் கலங்க விடைதந்தார்!!
அது தான் அவர் தந்த கடைசி விடை
என்று நாண் எண்ணவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறப்பிருந்தால் இறப்பிருக்கும்
இது நியதி!
அறிந்திருந்தும் மறப்பதற்கு
ஒன்றல்ல இரண்டல்ல
சின்னப்பு- வள்ளிப்பிள்ளை தம்பதிகள்
பெற்றெடுத்த பிள்ளைகளில்
முத்துக்களாய் மூன்று ஆண்கள்
மூவேந்தர் போல அவர்
சிலவேளை
முட்டிமோதியதும் உண்டு!
முற்கோபம் கொண்டு
பகைசொல்லிச் சென்றாலும்
அடுத்த கணம்
அரவணைத்துக் கொண்டதுண்டு
இவ்வுலகில் மட்டுமல்ல
விண்ணுலகில் கூட அவர்
கூடியிருப்பதற்காய் ஈராண்டு
இடைவெளியில் மூவருமே
சென்றுவிட்டார் !!!
பிறப்பவர்கள் இறப்பது நிஜம் என்றால்
இறப்பவாகள் மீண்டும்
எம்முள் பிறப்பதுவும் நிஜமன்றோ!!
அதுவரையில்
அந்த உத்தமர்கள் சொல்லிச் சென்ற
உயர் வழியில் நின்றிடுவோம்
அவர் வாழ்வே நாம் வாழ
வழிகாட்டும் என்றெண்ணி
அமைதியுடன் பிரார்த்திப்போம் ....!!!

ஓம் சாந்தி சாந்தி சாந்தி.

ஐயும் தொடர்ந்து விழியும் சொருகி அறிவழிந்து
மெய்யும் பொய்யாகி விடுகின்ற போதொன்று வேண்டுவன்யான்
செய்யும் திருவொற்றி ஊர் உடையிர் திருநீறுமிட்டுக்
கையும் தொழப்பண்ணி ஐந்தெழுத்து ஓதவும் கற்பியுமே.

குமணன் நல்லதம்பி
வன்கூவர்
கனடா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பின் உறைவிடமாய்..................

அன்பின் உறைவிடமாய்
பண்பின் பிறப்பிடமாய்
பாசத்தின் இருப்பிடமாய்
குடும்ப அகல்விளக்காய்
தரணி போற்றும் தந்தையாய்
இருந்த எம் அப்பாவே

மழலைகள் எம் நால்வரை மடிதனில் வைத்து
நல்லோராய் நாம்வாழ நன்னெறிகள் பலகூறி
கல்வியை நல் ஒழுக்கத்தை நமக்கு ஊட்டி
அல்லும் பகலும் அயராது உழைத்து எம்மை
பல்கலைக்கழகம் வரை பட்டதாரிகள் ஆக்கி
பார்புகழ எம்மை சிறப்புடன் வாழவைத்து
திருமண வாழ்விலே எம் நால்வரையும் கண்டு
எம்மை விட்டு பிரிந்து சென்றீர்களே

உங்கள் அளவில்லாப் பொறுமை
கனிவான குரல் நயம்
அழியாத புன்னகை
சுற்றாரை மதிக்கும் தன்மை
என்றும் எம் நினைவில் நிற்கும்
மாறாது எங்கள் துயர்
மறக்காது எம் இதயம்.

**இராதா மோகன்,**
**கனடா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## நிறைமொழி

நீர்க்குமிழ் போலத் தோன்றி
நிலையின்றி நீங்கும் வாழ்வு
பார்தனிற் பிறப்போ ரெல்லாம்
பழவினைப் பயன்நு கர்ந்தே
தீர்ந்ததும் சிறிதும் தங்கார்
தேகத்தை விட்டுச் செல்வார்
சேர்பிற விப்பிணி நீங்கில்
சிவனடி தன்னில் சேர்வார்.

ஆதலால் கவலை விட்டு
ஆறுதல் கொள்வோம் என்றும்
பூதலம் வாழும் நாளில்
புண்ணியச் செயலைச் செய்வோம்
தீதினை நீக்கி வாழ்வோம்
* மாதொரு பாக னாரின்
மலரடி தினம் பணிவோம்
ஓம் சாந்தி சாந்தி சாந்தி.

**அ. கி. ஏரம்பமூர்த்தி.**

* தூய சிந்தனை வளர்ப்போம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி

**எங்கள் குடும்பத்தலைவன்**
**அமரர்**

# சின்னப்பு தாமோதரம்பிள்ளை

**அவர்களின்**

பிரிவினில் துயருறும் எமை இங்கு
ஆற்றிய பண்புசால் உற்றார், உறவினர்,
ஊரவர்,பரிதவித் தேங்கியோர் துயர் குறைத்
துதவிய அயலவர், ஆர்வலர் அலுவலக நண்பர்கள்
ஆறுதல் மொழிக்கென்று தேறுதல் வார்த்தைகள் அனுப்பிய
உள்ளூர் வெளியூர்உறவுகள் அமரரின் நோய்தனில்
உடனிருந்திட்டஅன்பிலும் பண்பிலும் சிறந்திட்ட தொண்டர்கள்
இன்னும் கிரியைகள் செய்திட உதவியோர்ஈமக் கிரியையில்
பங்குபற்றியோர் சிறப்புற இம்மலர் வடித்திட ஆக்கங்கள்
அனுப்பிய அன்பர்கள்
ஆதரவாளர்கள்

அமரரின் ஆத்ம சாந்திக்காய் அனுதினம்
அரனினைப் போற்றியேதாழ் பணிந்திட்டவர்
அனைவர்க்கும் அடக்கமாய் அன்புடன் கூறுவோம்
இமயத்தை விஞ்சிடும் கோடி நன்றிகள்.



**மனைவி**

**மக்கள்,**

**மருமக்கள்,**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# வம்சாவழி

கந்தர் சின்னப்பு + வள்ளிப்பிள்ளை

அப்பையா + நாகரத்தினம்

- அமரர் நல்லதம்பி + செல்லம்மா
- அமரர் தாமோதரம்பிள்ளை
- தங்கம்மா + ஏரம்பமூர்த்தி
- நல்லம்மா + பொன்னம்பலம்
- செல்லம்மா + அமரர் சண்முகநாதன்
- அமரர் கிருஷ்ணசாமி + தெய்வநாயகி

அமரர் பரமேஸ்வரி + அமரர் கதிரவேலு


சிவபாதம் + தையல்நாயகி

யோகேஸ்வரி

- றாதா + சந்திரமோகன்
- சீதா + கண்ணன்
- சுதா + ஸ்ரீதரன்
- லதா + ஜீவகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கீதாசாரம்

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது. எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்கவிருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும். உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகின்றாய்? எதை நீ கொண்டு வந்தாய்? அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கின்றாய் அது வீணாவதற்கு. எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது நீ இங்கிருந்தே எடுக்கப்பட்டது. எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது. எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகின்றது. மற்றொருநாள் அது வேறொருவருடையதாகும்.
இந்த மாற்றம் உலகநியதி.

– பகவத்கீதை –

S.S.R. Computer & Offset Printers, 537, Sivankovil Rd. Thirunelvely

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org